# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.48/2019 நாள். 31.10.2019

## தனி அலுவலர் அவர்களின் அக்டோபர் 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

**31.10.2019**ம் நாள் வியாழன்கிழமை மாலை **4.30** மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் அக்டோபர் 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | அக்டோபர் 2019 | 0 | 0 | 13 | 5 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

அலுவலக குறிப்பு : கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

**18.10.2019**ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வெள்ள தடுப்பு பணிக்கான உபகரணகள் கொள்முதல் செய்தல் பணி | 2.00 | லட்சுமி எண்டர்பிரைசஸ்<br>மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |
| 2. | நகராட்சிக்கு வாடகை அடிப்படையில் ஜே.சி.பி மற்றும் லாரி சப்ளை செய்தல் பணி | 1.00 | ஜி.சுரேஷ்<br>கே.ஜெயசீலன் | 0.05 % குறைவு<br>1.25 % அதிகம் |
| 3. | நிவாரண மைய பள்ளிகளில் மின் இணைப்பு வழங்க மின் ஊக்கி (ஜெனரேட்டர்) வாடகை அடிப்படையில் | 1.00 | லட்சுமி எண்டர்பிரைசஸ்<br>மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.15 % குறைவு<br>1.30 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சப்ளை செய்தல் பணி | | | |
| 4. | வெள்ள தடுப்பு பணிகளுக்கு மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு கொம்புகள் சப்ளை செய்தல் பணி | 1.00 | வி.குணாளன்<br>டி கே இன்டஸ்ரியல் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |
| 5. | நகராட்சிக்கு சொந்தமான டீசல் இன்ஜீன்கள் பழுது பார்த்து பராமரிப்பு செய்தல் பணி | 0.80 | வி.குணாளன்<br>டி கே இன்டஸ்ரியல் | 0.10 % குறைவு<br>0.95 % அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 4**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண். 1 முதல் 6 வரை மழை காலங்களில் சேதமடைந்த சாலைகளை செப்பணிடுதல் பணி | 3.00 |
| 2. | வார்டு எண். 7 முதல் 12 வரை மழை காலங்களில் சேதமடைந்த சாலைகளை செப்பணிடுதல் பணி | 3.00 |
| 3. | வார்டு எண். 13 முதல் 18 வரை மழை காலங்களில் சேதமடைந்த சாலைகளை செப்பணிடுதல் பணி | 3.00 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண். 17 வாசுகி தெருவில் தற்காலிக சாலை அமைத்தல் (ம) நகராட்சி பகுதிகளில் உள்ள மழைநீர் கால்வாய்களில் மேல் மூடி (PreCast Slab) அமைத்தல் பணி | 4.00 |
| 2. | வார்டு எண். 17 சர்வீஸ் ரோடு முதல் லஷ்மி நகர் பகுதிக்கு செல்லும் சாலையில் விடுபட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 3.00 |
| 3. | வார்டு எண்.4 பல்லவன் 2வது குறுக்கு தெரு மற்றும் சந்தில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 5.00 |
| 4. | வார்டு எண்.9 பஜார் தெருவில் வடிகால்வாய் உயர்த்தி அமைத்தல் பணி | 3.00 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 6</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 9 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள், பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி ரூ.9.90 இலட்சத்திற்கு மெசஸ். ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே பழைய பிரதான குழாய், பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் இணைப்பு அதிகளவில் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை நவம்பர் மாதத்துடன் முடிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் குடிநீர் திட்ட பணி தொடர்ந்து நடைபெருவதால் இதே ஒப்பந்தத்தில் பழுது பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்ய கூடுதல் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.திட்ட பணியின் மூலம் பகிர்மான குழாய் அமைக்கும் போது எதிர்பாரதவிதமாக ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் கூடுதல் தொகை ரூ.4.50 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண். 7</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் வார்டு எண். 10 முதல் 18 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள், பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி ரூ.9.90 இலட்சத்திற்கு மெசஸ். ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே பழைய பிரதான குழாய், பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் இணைப்பு அதிகளவில் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத்

தொகை நவம்பர் மாதத்துடன் முடிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் குடிநீர் திட்ட பணி தொடர்ந்து நடைபெருவதால் இதே ஒப்பந்தத்தில் பழுது பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்ய கூடுதல் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.திட்ட பணியின் மூலம் பகிர்மான குழாய் அமைக்கும் போது எதிர்பாரதவிதமாக ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் கூடுதல் தொகை ரூ.4.50 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 8**

தூய்மை இந்தியா திட்டம் 2019–2020ம் ஆண்டின் கீழ் சென்னை தலைமை செயயகத்தில், 31.10.2019ல் நடைபெற்ற 10வது மாநில உயர் மட்டக்குழு கூட்டறிக்கையின் அறிவுறுத்தலின்படியும் மத்திய மற்றும் மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட புகை உமிழ்வு விதிகளுக்கு உட்பட்டு, அனகாபுத்தூர் நகராட்சிப் பகுதிகளில் சேகரமாகும் உலர் கரிவு குப்பகைளை உரியூட்டி சாம்பல் ஆக்குவதற்கு உரியூட்டு மையம் (10 TPD Incineration Plant) கல்மவுடு பகுதியில் உள்ள சர்வே எண்.257/1A&309/1,3 உள்ள இடத்தில், குப்பை கிடங்கில் அமைப்பதற்கு ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கு மற்றும் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி கோரி, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.9**

தூய்மை இந்தியா திட்டம் 2019–2020ம் ஆண்டின் கீழ் சென்னை தலைமை செயயகத்தில், 31.10.2019ல் நடைபெற்ற 10வது மாநில உயர் மட்டக்குழு கூட்டறிக்கையின் அறிவுறுத்தலின்படி அனகாபுத்தூர் நகராட்சிப் பகுதிகளில் சேகரமாகும் மறுசுழற்சி மற்றும் விற்பனை செய்ய இயலாத குப்பைகள் மற்றும் அபாயகரமான வீட்டு குப்பை கழிவுகளை சேகரிக்கும் மையம் (Resource Recovering Centre) கல்மவுடு பகுதியில் உள்ள சர்வே எண்.257/1A&309/1,3 உள்ள இடத்தில், குப்பை கிடங்கில் அமைப்பதற்கு ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கு மற்றும் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி கோரி, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

அனகாபுத்தூர் நகராட்சிக்கு பூந்தண்டலம் விவசாய கிணற்றில் இருந்து நகராட்சி லாரி மூலம் குடிநீர் எடுத்தல் பணி ரூ.7.00/– இலட்சத்தில் மேற்கொள்ள உரிய வழிமுறைகளை பின்பற்றி ஒப்பந்ததாரர் தேர்வு செய்து 19.06.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு விவசாய கிணற்றிலிருந்து நகராட்சி லாரி மூலம் குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அனகாபுத்தூர் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி பணிகள் (IUDM) திட்டத்தின் மூலம் ரூ.6.40 கோடியில் பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகளுக்கு அருகில் உள்ள செங்கழுநீர் மலை பள்ளத்தில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, அனகாபுத்தூர் நகராட்சியில் தினந்தோறும் 1.00 MLD குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி செங்கழுநீர் பள்ளத்தில் நீரின் அளவு குறைந்து உள்ளதால், போதுமான அளவிற்கு குடிநீர் பெற கிடைக்கப்பெறவில்லை. மேலும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலமும் குடிநீர் நகராட்சிக்கு வழங்கப்பட்டு வந்த குடிநீர் தற்போது விநியோகம் செய்யவில்லை. வடகிழக்கு பருவமழையும் போதிய அளவில் பெய்யாததால், குடிநீர் பிரச்சனை சமாளிக்கும் பொருட்டு குடிநீர் பணியின் அவசரத்தை கருத்தில் கொண்டு ஏற்கனவே உரிய வழிமுறைகளை பின்பற்றி விவசாய கிணற்றிலிருந்து நகராட்சி லாரி மூலம் குடிநீர் எடுத்துக்கொள்ள பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.எம்.நித்தியானந்தம், அவர்களின் விவசாய கிணற்றில் குடிநீர் எடுத்துக்கொள்ள ஏற்கனவே வழங்கிய ஒப்பந்த விலை விகிதத்திலேயே தொடர்ந்து குடிநீர் எடுத்துக்கொள்ள கூடுதலாகும் செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும், செலவின தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2.பொது மக்களுக்கு தொடர்ந்து சீரான முறையில் குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே குடிநீர் வழங்கி வரும் ஒப்பந்ததாரரின் விவசாய கிணற்றிலிருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யவும், ஏற்கனவே வழங்கிய விலை விகிதத்திலேயே பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.11</u>**

அனகாபுத்தூர் நகராட்சி வருவாய் பிரிவிற்கு கீழ்கண்ட தளவாட பொருட்கள் இருப்பில் குறைவாக இருப்பதால் கீழ்கண்ட விவரப்படி வாங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பட்டியல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கேட்பு அறிவிப்பு | 10,000 |
| 2 | 7 நாட்கள் அறிவிப்பு நோட்டீஸ் | 3,000 |
| 3 | வருவாய் உதவியாளர் நாட்குறிப்பு | 15 |
| 4 | சொத்து வரி பெயர் மாற்ற விண்ணப்பம் | 5,000 |
| 5 | தொழில் வரி விணணப்பம் | 1,000 |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

அனகாபுத்தூர் நகராட்சில் உள்ள 18 வார்டுகளில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு 41 ஒப்பந்த பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.பருவமழை காலமாக உள்ளதால் இரண்டு மாதங்களாக மழை விட்டு விட்டு சென்னையை சுற்றியுள்ள நகரங்கள் மற்றும் கிராம பகுதிகளில் வைரஸ் காய்சல் மற்றும் டெங்கு காய்சல் வேகமாக பரவி வருகிறது.இதனை கட்டுப்படுத்துவது குறித்து 9.10.2019 மற்றும்14.10.2019 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களாலும் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டன. மேற்படி ஆய்வு கூட்டத்தில் காய்சல் பரவாமல் தடுக்கவும் தினசரி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறையிலிருந்து பெறப்படும் உள்நோயாளிகளின் விவரம் கிடைத்தவுடன் மேற்படி வீடுகளை சுற்றியுள்ள பகுதிகளில் நோய்தடுப்பு பணிகளை மேற்கொள்ள தனியாக குழுகள் ஏற்படுத்தவும் அதற்கென அனகாபுத்தூர் நகராட்சிக்கு 9 ஒப்பந்த கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அறுவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி பணியாளர்களை அவசரம் அவசியம் கருதி உடனடியாக நியமனம் செய்ய போதிய கால அவசரம் இல்லாத காரணத்தால் ஏற்கனவே ஓப்பந்த விதிகளின் படி சப்ளை செய்ய பணி உத்தரவு வழங்கிடவும் அவர்களுக்கு ஊதிய செலவு தொகை வழங்க தேராய செலவினம் ரூ.9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வாங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.150/2016/எச்1)

**<u>பொருள் எண்.13</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் கொசுபுழு ஒழிப்பு பணியாளர்கள் 50 ஒப்பந்த பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது கொசு ஒழிப்பு பணியாளர்கள் வீடுவீடாக டெங்கு விழிப்புணர்வு ஏற்ப்படுத்த தேவையான விழிப்புணர்வு ஏற்ப்படுத்த தேவையான விழிப்புணர்வு ஸ்டிக்கர் வாங்கிடவும் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொள்ள அதற்கான தோராய செலவு ரூ.1.25 இலட்சம் மேற்கொள்ள ஆணையர் அனுமதி மற்றும் ஒப்புதலுக்கு.

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வாங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.150/2016/எச்1)

**<u>பொருள் எண்.14</u>**

டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்படி ஆய்வுக் கூட்டத்தில், கொசு ஒழிப்பு மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன. தற்போது பொது சுகாதாரப் பிரிவில், கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளதால், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை தீவிரப்படுத்த பைரித்திரம் 2% என்ற புகைமருந்து 200 லிட்டர் பொது மேலாளர், தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு ரூ.2.25 இலட்சம் ஆகும்.

<u>அலுவலகக்குறிப்பு :</u> பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.15</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் கொசுபுழு ஒழிப்பு பணியாளர்கள் 50 ஒப்பந்த பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது பருவமழை பெய்து வருவதால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர், உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் சுகாதார துறை செயலாளர் ஆய்வு கூட்ட உத்திரவின்படி மேற்படி பணியாளர்களுக்கு சீருடை , மழைகோர்ட், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மேற்படி பொருட்கள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவு ரூ.1.50 இலட்சம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u> பொது சுகாதார அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.150/2016/எச்1)

<u>பொருள் எண்.16</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஒரு அடி dia ஆர் சி சி பைப் சப்ளை செய்தல் பணி | 1.00 |
| 2. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 45 எண்ணிக்கையிலான உயர் கோபுர விளக்கினை ஒரு வருட காலத்திற்கு பழுது பார்த்து பராமரித்தல் பணி | 9.90 |
| 3. | வார்டு எண்.5 ராகவேந்திரா கோயில் தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.00 |
| 4. | நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள நகர மன்ற தலைவர் அறை மற்றும் நகரமன்ற கூடம் பழுது பார்த்து மராமத்து பணிகள் செய்தல் பணி | 5.00 |
| 5. | நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அறை அமைத்தல் மற்றும் பழுது பார்த்து மராமத்து பணிகள் செய்தல் பணி | 5.00 |
| 6. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஏசிகளுக்கு ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி | 1.50 |

<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.17</u>

அனகாபுத்தூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணிக்காக JNNURM-UIG திட்டத்தின் கீழ் மேற்கொள்ள ரூ.1487.63 இலட்சத்திற்கு அரசாணை (MS) எண்.160 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (WS1) துறை நாள்.19.12.2014ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி பணியினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் செயல்படுத்திடவும் மேற்படி அரசாணையில் உத்திரவிடப்பட்டது. மேற்படி பணிக்கு 2014–15ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூ.1808.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேலும் மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ.1888.00 இலட்சத்திற்கு அரசாணை (MS) எண்.137 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்.26.12.2018ல் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

தற்போது அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 05 அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின் பேரில், விரிவான திட்ட அறிக்கையில் உள்ள 5206 வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு மட்டும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 5388 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் தற்போது திட்ட பணி மேற்கொள்ளும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. தற்போது மீதமுள்ள 5388

வீடுகள் குடிநீர் இணைப்பு வழங்கவும், மேற்பார்வை கட்டணம், பராாரிப்பு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உட்பட பணி மேற்கொள்ள திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ.2717.00 இலட்சமாகும் எனவும், மேற்படி செலவினத்தொகைக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்று தருமாறு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் கடிதம் வழங்கப்பட்டது. எனவே ஏற்கனவே அரசாணையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1888.00 இலட்சம் போக மீதமுள்ள கூடுதலான தொகை ரூ.829.00 இலட்சத்திற்கு இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தினாலும் மேற்படி கூடுதல் தொகை ரூ.829.00 இலட்சத்தினை அரசிடமிருந்து முழு மான்யமாக பெற்று இத்திட்டத்தினை நிறைவேற்றிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. இத்திட்டத்தினை நிறைவேற்றிட அரசாணையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1888.00 இலட்சம் போக மீதமுள்ள கூடுதலான தொகை ரூ.829.00 இலட்சத்தினை அரசிடம் முழு மான்யமாக பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி